**இலங்கை நீதிவான்களின் நிறுவனம் - 2017**

---

இலங்கை நீதிவான்களின் நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிவான்களின் நிறுவனச் சட்டத்தின் 10(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2018 ஆகஸ்ட் 20 திகதி நிறுவனத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் தற்துணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை நீதிவான்களின் நிறுவனத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றேன் என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 396 | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 06 மாதங்களை மிகைத்த வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 6,424 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/நூல/01 ஆம் இலக்க நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவை சபை சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 6,701,271 பெறுமதியான புத்தகங்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 19 ஆம் பிரிவு மற்றும் 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 45 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களைச் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவ சபையினால் பொறுப்பேற்பதாக கூற்றொன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 11,233,770 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 30,740,552 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 41,974,322 ஆன வீழ்ச்சியொன்று காணக்கூடியதாக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வருமானம் ரூபா 123,032,510 ஆல் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 153,749,551 ஆலும் ஏனைய செலவினம் ரூபா 7,911,888 ஆலும் அதிகரித்தமை இந்நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2013 ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகளில் மிகையொன்று காண்பித்த போதிலும் 2017 ஆண்டின் போது அது பற்றாக்குறையாக மாறியிருந்தது.

ஊழியர் ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்ததன் பின்னர் நிறுவகத்தின் திரட்டிய பங்களிப்பு 2013 ஆண்டில் ரூபா 3,441,756 முதல் மீளாய்வாண்டில் ரூபா 10,335,479 வரை அதிகரிப்பொன்று காண்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அது 74% இனால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிவான்களின் நிறுவனச் சட்டத்தின் கீழ் இலங்கை நீதிவான்களின் நிறுவகத்தின் தேவைகளுக்காக நிதி ஏற்பாடுகள் நீதி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. நீதி உத்தியோகத்தர்களுக்கு இடையே நீதிமன்றம் சார்ந்த மற்றும் சட்ட விடயங்கள் தொடர்பாக அபிப்பிரயாம் மற்றும் கருத்து பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்துதல், நீதி உத்தியோகத்தர்களின் தொழிற்துறை தேர்ச்சியினை முன்னேற்றுதல் மற்றும் அவர்களின் அறிவு விருத்திக்காக கூட்டங்கள், கருத்தரங்குகள், விரிவுரைகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல் மற்றும் நடாத்துதல் நியாயம் தொடர்பாக பல்வேறு துறைகள் தொடர்பாக பயிற்சியளித்தல் மற்றும் ஆராய்ச்சி பாடநெறிகளை தயாரித்தல் மற்றும் நடாத்துதல், நீதி உத்தியோகத்தர்களுக்காக நூலக வசதிகள் மற்றும் ஏனைய கல்வி உபகரணங்கள் வழங்கும் நிறுவகத்தின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகளாக இருந்தன. நிறுவகத்தினால் அச்செயற்பாடுகளை செயற்படுத்துவதற்குரிய பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி மாவட்ட நீதிபதிகள், மேலதிக மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதிபதிகளுக்காக 60 பயிற்சி பட்டரைகள் மற்றும் பதிவாளர்களுக்காக 06 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை ஆண்டின் போது நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும முறையே 32 பயிற்சி பட்டரைகள் மற்றும் 02 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் செயற்படுத்துவதற்காகத் திட்டமிட்டிருந்த மேலும் 04 நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவியணியினரை பயிற்றுவிப்பதற்காக வருடாந்த மதிப்பீடு ரூபா 500,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பதவியணி முகாமைத்துவம்

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 26 ஆக இருந்த போதிலும் 2018 மார்ச் 14 ஆந் திகதி வரையிலும் உள்ளவாறான பதவியணியினர் 18 ஆக இருந்தமையால் 08 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன.

## 5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சிநிரலின்'' பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டியிருப்பதுடன் மீளாய்வாண்டிற்குரித்தாக நிறுவனத்தினால் தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

மேற்குறித்ததன் பிரகாரம் 2030 நிகழ்ச்சிநிரல் தொடர்பாக அறிந்திருப்பதன் பேரில் நிறுவனத்தினால் தமது விடயப் பரப்பின் பிரகாரம் அடைந்துகொள்ள வேண்டிய நோக்கங்களாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் நிறுவகத்தின் நோக்கங்களுடன் இணைந்ததாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிறுவகத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாக நீதிபதிகளை பயிற்றுவித்தல இனங்காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைவு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதியன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தினால் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலம் 2016 ஆம் ஆண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீய்வாண்டிற்குரியதாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் 03 உருப்படிகளை கையேற்பதற்காக ரூபா 7,500,000 ஆன மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் அச்சொத்துக்கள் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**6.4 பாதீட்டு கட்டுப்பாடு**

(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு மற்றும் 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தியின் படி ஒவ்வொன்று நிதியாண்டிற்குமாக பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் நிறுவனத்தின் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அதன் பிரதியொன்று குறிப்பிட்ட ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

**7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுன், பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) இருப்புக் கட்டுப்பாடு | • பொருளிருப்பு பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.<br>• பொருள் பெறுவனவிற்காக பெறுவனவுக் கட்டளைகள் விநியோகிக்கப்படாமை |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல். |